பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

09 10 2024 **WEDNESDAY** 6 30 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பல்வேறு நலத்திட்டங்களுக்கு இலவசமாக செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் திட்டத்தை அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. மருந்து உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு, தொழில்புரிவதற்கு உகந்த சூழலையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 21 பேர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

5. ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

>>>><<<<

பல்வேறு மக்கள் நலத்திட்டங்களுக்கு இலவசமாக செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் திட்டத்தை அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

ரத்தசோகை குறைபாட்டை களையவும் இந்த நடவடிக்கை உதவிடும் என்று அவர் கூறினார்.

17 ஆயிரத்து 82 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகத்தை ஏற்படுத்துவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

குஜராத் மாநிலம், **Lothal-**ல் இது அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் மாநிலங்களுக்கு உட்பட்ட எல்லைப் பகுதிகளில் 2 ஆயிரத்து 280 கிலோமீட்டர் தொலைவிற்கு 4 ஆயிரத்து 406 கோடி ரூபாய் செலவில் சாலை அமைக்கும் திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

மத்திய அமைச்சரவையின் இந்த முடிவுகள் ஊட்டச்சத்து குறைபாடுகளை களைவதற்கும், எல்லைப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் உதவிடும் என்று தகவல் ஒலிப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், எல்லையோரப் பகுதியில் உள்ள கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அமைச்சரவையின் இந்த முடிவுகள் வலு சேர்க்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

மருந்து உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உள்நாட்டிலேயே மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு கூடுதல் ஊக்கமளிக்கப்பட்டுவதாக தெரிவித்தார்.

இதன் காரணமாக, குறைந்த செலவில் உயரிய தரத்திலான மருந்துகள் தற்போது உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுவதாக அவர் கூறினார்.

மருந்து உற்பத்தியில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

தொழிலாளர்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் அரசாக தமிழக அரசு திகழ்கிறது என்று நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொழிற்சாலைகளும் மனநிம்மதியுடன் தொழிலை நடத்துவதற்கு உகந்த சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளதாகவும் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - தங்கம்தென்னரசு 37 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, தொழிலாளர் விரோதப் போக்கினை திமுக அரசு கடைபிடிப்பதாக அஇஅதிமுக, பாமக, தேமுதிக ஆகிய கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

>>>><<<<

கொடைக்கானலில் மண்சரிவு ஏற்படுவதை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு கூறியுள்ளார்.

இன்று கொடைக்கானலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மலைப்பகுதியில் மாற்றுச்சாலை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>><<<<

திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், சுவாமிமலை உள்ளிட்ட முருகன் திருக்கோவில்களில் ஆயிரத்து 40 கோடி ரூபாய் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு கூறியுள்ளார்.

இன்று திருச்செந்தூரில் இப்பணிகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இப்பணிகள் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் நிறைவடையும் என்றும் அவர் கூறினார்.

திருச்செந்தூரில் 540 பேர் தங்குவதற்கு ஏதுவாக புதிய தங்கும் விடுதி கட்டப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 21 பேர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்கோட்டையைச் சேர்ந்த இந்த மீனவர்கள், நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, சர்வதேச கடல் எல்லையை தாண்டியதாக கூறி இலங்கை கடற்படை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

>>>><<<<

அரபிக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தமரக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், இதன் காரணமாக அடுத்த 6 நாட்களுக்கு, தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் மழைக்கு வாய்ப்புள்ளதாக கூறினார்.

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பள்ளிகளில் மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>><<<<

சென்னை அடையாறு மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில், வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாடுகள் குறித்த குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டம், மாநில அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>><<<<

தருமபுரி மாவட்டத்தில் தூய்மையே சேவை இயக்கத்தின் கீழ், அதியமான்கோட்டை, காலபைரவர் திருத்தல வளாகத்தில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

>>>><<<<

தேனி மாவட்டத்தில் புலிகள் பாதுகாக்கப்பட வேண்டிதன் அவசியம் குறித்த நடைபயணம் இன்று மேற்கொள்ளப்பட்டது.

>>>><<<<

மதுரை மாவட்டத்தில் தகவல் அறியும் உரிமை பெறும் சட்டம் குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி. சங்கீதா தொடங்கி வைத்தார்.

>>>><<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறை சார்பிலான பொதுமக்கள் குறைதீர்நாள் கூட்டம், காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி. ஸ்ரேயா குப்தா தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>><<<<

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், 12 லட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. பிரசாந்த் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>><<<<

கன்னியாகுமரி மாவட்டம், வெள்ளங்கோட்டில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. அழகுமீனா பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா பதக்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும்.

ஆடவர் பிரிவிலும் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 3-1 என்ற ஆட்டக்கணக்கில் கஜகஸ்தானை வென்றது.

----------

உலக ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Pranay Shettigar, Tanvi Sharma** மற்றும் **Aalisha Naik** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

சீனாவின் **Nanchang-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் **Pranay Shettigar** 21-11, 21-13 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Kong Zhou Swin-**ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டங்களில் **Tanvi Sharma** 21-19, 8-21, 22-20 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Nayu Shirakawa-**வையும், **Aalisha Naik** 21-18, 21-14 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் **Rajvi Parab-**ஐயும் வென்றனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Bhargav Ram – Vennala Kalagotla** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-----------

தோஹாவில் நடைபெற்று வரும் சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Divyanshi** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-----------

உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**>>>>END<<<<**